ஸ்ரீ தந்வந்தரயே நம :

# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்திரிகை.

ஸாதாரண
ஐப்பசி

NOVEMBER
1970



தொகுதி 32
பகுதி 11

Vol. 32
No. 11

ஆசிரியர் :
வைத்ய வாசஸ்பதி பண்டிட் P. S. ராம சர்மா.

பிரசுரகர்த்தா :
வைத்ய T. S. ஈச்வரன், L. I. M.

வருஷச் சந்தா
ரூ. 5/-

Annual
Subscription
Rs. 5/-

நிழல்தரும் மரம் சாய்ந்தது ... 213

ஸஹஸ்ரயோகம் ... 216

காரியாலயம் : 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

## வைத்யரத்னம் P. S. வாரியருடைய

# ஆர்ய வைத்தியசாலா

### கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

Registered Trade Mark.

தலைமை ஆபீஸ் போன்: கோட்டக்கல் எக்ஸ்சேஞ்ஜ் ஆபீஸ் - மேனேஜிங் டிரஸ்டி - மானேஜர் தொடர்புடன் போன் நெ 31

| | | |
|---|---|---|
| நர்ஸிங்ஹோம் | | போன் நெ. 44 |
| தலைமை வைத்யர் | | போன் நெ 25 |
| மானேஜிங் டிரஸ்டி | (வீடு) | போன் நெ 27 |
| மானேஜர் | (வீடு) | போன் நெ. 26 |

**சென்னை கிளை:**

No. 1, கிருஷ்ணமாசாரி ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை 34. போன் எண் 811275

**மற்ற கிளைகள்:**

1. கோழிக்கோடு (போன் 2155)
2. பாலக்காடு (போன் 104)
3. பாலக்காடு ஸேல்ஸ் டிபோ (போன் 584)
4. ஆல்வாய்
5. ஈரோடு (போன் 172)
6. திரூர் (போன் 31)
7. எர்ணாகுளம் (போன் 33026)
8. திருவனந்தபுரம் (போன் 3924)

மேலும் நூற்றுக்கு மேற்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளும், டெபோக்களும்

சுத்தமானதும், உயர்தரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும். எமது தலைமை வைத்யரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக்கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் **கோல்டன் ஜூபிலி நர்ஸிங்ஹோமில்** நடத்தப்பெறும்.

மற்ற விபரங்களுக்கு:—

**மானேஜிங் டிரஸ்டி.**
ஆர்ய வைத்யசாலை, கோட்டக்கல்.

# திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் பிரைவேட் லிமிடெட்.,

[ஸ்தாபிதம் 1939.]


ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் அண்டு விற்பனை டிப்போ:
31, A. சின்னக் கடைத்தெரு,
திருச்சிராப்பள்ளி-2.

Phone No. 4202


வைத்தியர்களுக்குத் தேவையான எல்லா சிறந்த ஆயுர்வேத மருந்துகளும் தயாரித்து வைத்தியர்களுக்கென விசேஷச் சலுகையுடன் குறைந்த விலையில் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

## எமது விசேஷ புத்தக வெளியீடு-1.

எமது ஸ்தாபனத்தில் கிடைக்கும் மருந்துகளின் செய்முறையை விளக்கும்

# ஔஷத யோக ஸங்கிரஹம்

## முதல் பாகம்

பிரதி விலை ரூ. 5-00. தபால் செலவு தனி.

விசேஷ விபரங்களுக்கு நேரில் எழுதித் தெரிந்து கொள்ளவும்

T. S. ஈச்வரன், L.I.M. மானேஜிங்டைரக்டர்.

GRAM: KALIA

Phone: Off. 3232, Res. 4343

# KALIA BROTHERS (Regd.)

INDIAN DRUGS MERCHANTS

JULLUNDUR CITY. (INDIA)

| Price List | | Rs. ps. |
|---|---|---|
| Pure Musk per gram | | 50-00 |
| Pure Saffron | | 2-00 |
| Pure Gorochanam per gram | | 9 00 |
| Pure Pearls Spl. | ,, | 10-00 |
| ,, No. 2 | ,, | 7-00 |
| ., No. 3 | ,, | 4-00 |
| Pure Ambar No. 1 | ., | 3-50 |
| ,, No. 2 | ,, | 2-50 |
| ,, No. 3 | ,, | 2-00 |
| Pure Silver Leaves | ,, | 0-80 |

PACHAKARPURAM

| | | |
|---|---|---|
| Spl. Bhimseni per gram | | 0-30 |
| Singapuri (Yellow) | ,, | 0-25 |
| German or Japan | ,, | 0-20 |
| Powder Pachakarpuram | | 0-06 |
| Pure Menthol | ,, | 0-45 |
| Pure Thymol | ,, | 0-20 |
| Ashtavargam | per Kilo | 7-50 |
| Jiwak Rishwak | ,, | 2-50 |
| Meda Mahameda | ,, | 8-00 |
| Kakoli Kshir Kakoli | ,, | 8-00 |
| Ridhi Vridhi | | 12-00 |
| Silajit (Kalmodam) | | |
| Suryatapi Silajit No. 1 | ,, | 100-00 |
| No. 2 | ,, | 85-00 |

CRUDE DRUGS

| | | |
|---|---|---|
| Attis Bitter | ,, | 100-00 |
| Beedana | ,, | 20-00 |
| Guggulu Shudh | ,. | 12-00 |
| Gowela | ,, | 60-00 |

| Price List | | Rs. Ps. |
|---|---|---|
| Kuth No. 1 | per Kilo | 5-00 |
| Moosli White | ,, | 15-00 |
| Pushkar mool | ,, | 5-00 |
| Rose Flower Dry | ,, | 10-00 |
| Som Lata | ,, | 10-00 |
| Salib Panja | ,, | 85-00 |
| Salib Gatha | ,, | 20-00 |
| Shingraf | ,, | 300-00 |
| Tiger's Fat | ,, | 45-00 |
| Bears Fat | ,, | 40-00 |
| Pure Vanslochan | ,, | 80-00 |

AYURVEDIC MEDICINE

| | | |
|---|---|---|
| Chander Prabha | per Kilo | 70-00 |
| Chavan prash | ,, | 10-00 |
| Gudoochi Sattoo (Sindi Maw) | ,, | 12-00 |
| Ras Sindur | ,, | 300-00 |
| Shudh parad | ,, | 300-00 |
| Swaran Vang | ,, | 200-00 |
| Yogaraj Guggulu | ,, | 30-00 |
| Kaishore ,, | ,, | 30-00 |
| Maha Yogaraj ,, | ,, | 140-00 |
| Abrak Bhasam | ,, | 200-00 |
| KantLoh Bhasam | ,. | 85-00 |
| Loh Bhasam Special | ,, | 150-00 |
| Shring Bhasam | ,, | 35-00 |
| Sankh Bhasam | ,, | 30-00 |
| Mandur Bhasam | ,, | 35-00 |
| Silajit Bhasam | ,, | 35-00 |
| Silver Bhasam | ,, | 700-00 |
| Swaran Makshik | ,, | 80-00 |
| Sulphur Purified | ,, | 50-00 |
| Tamber Bhasam | ,, | 300-00 |
| Sidh Makar Dhwaj | per gram | 4-20 |
| Makar Dhwaj ordinary | | 0-80 |

**Please ask for detailed Price List 6¼% Commission to the readers of Vaidya Chandrika**

தந்தி : "அம்ருதம்" P. B. No. 1382. போன் : 26006

# ஸ்ரீ ஆர்ய வைத்திய பார்மஸி

(கோயமுத்தூர்) லிமிடெட்.,

தலைமை ஆபீஸ்: 366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18

THE ARYA VAIDYA PHARMACY (COIMBATORE) LTD. AVP

**உண்மையான ஆயுர்வேத மருந்துகளுக்கும் சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்.**

— எங்களுடைய கிளைகள் : —

| | | |
|---|---|---|
| 1. | 23 B, பூஸா ரோடு, புது டில்லி : | போன் ; 585687 |
| 2. | மொயிதீன் பள்ளி ரோடு, கள்ளிக்கோட்டை 1 | ,, 2984 |
| 3. | கௌடியா மடத்தெரு, மதராஸ்-14 | ,, 85752 |
| 4. | வளிஞ்ஞம்பலம், எர்ணுகுளம், கொச்சின்-18 | ,, 32988 |
| 5. | பிள்ளையார் கோயில்ரோடு, கண்ணனூர்-1 | ,, 92 |
| 6. | மார்க்கெட் ரோடு, பாலக்காடு-1 | ,, 195 |
| 7. | கடைவீதி, பொன்னானி | ,, 41 |
| 8. | ரௌண்ட் வெஸ்டு, திருச்சூர் -1 | ,, 378 |
| 9. | கோர்ட் ரோடு, ஆலத்தூர் | ,, 87 |
| 10 | மெயின் ரோடு, கஞ்சிக்கோடு | |
| 11. | ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில், கோயமுத்தூர்-18 | ,, 33758 |
| 12 | இந்திரா பில்டிங், கள்ளிக்கோட்டை-2 | ,, 4891 |
| 13. | 229, ராஜவீதி, கோயமுத்தூர்-1 | ,, 33988 |
| 14. | T. T. 384 K. டெலிச்சேரி ரோடு, கண்ணனூர்-2 | |
| 15 | No. 263, 64 11 வார்டு, மெயின் ரோடு, எடப்பாள் (பொன்னானி) | |

பாக்டரி : கஞ்சிக்கோடு (கேரளா) (போன் : 2)

நர்ஸிங்ஹோம் : திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18. (போன் : 22194)

மேலும் விபரங்களுக்கு விண்ணப்பம் செய்க :—

ஆர்ய வைத்தியன் P. V. ராமவாரியர்
பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்.

# வாரியர்

# க்ஷீரபலா-101

ஸர்வாங்க வாதம், பாரிச வாயு முதலிய எல்லாவித மான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப் பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துகள் தசை நார்களில் வலி, வீக்கம், கை கால் வலி முதலிய எல்லாவிதமான நோவுகளையும் நிச்சயமாகக் குணப்படுத்தும். மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல், கண்-காது கோளாறுகள், ஒருத்தலைவலி முதலிய கோளாறுகளையும் குணப் படுத்தும் :

ரத்த அழுத்தம் [பிளட் பிரஷர்] என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கும் வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும் விருதாப்பியத்தினால் ஏற் படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்திக் குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலை 25 ML. ரூ. 7-00 ; 12 ML. ரூ.3–75

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

## அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனுபஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி-2.

PHONE : 5441 வீடு போன் : 6074

[1936-ல் நிறுவப்பட்டது.]

கஸ்தூரி, குங்குமப்பூ, மற்றும் இதர
உயர்ந்த மருந்து சரக்குகளுக்கு
நம்பிக்கையான இடம்

BHALLA BROTHERS (Regd.)

LUDHIANA (India)

IN THE SERVICE OF AYURVEDA SINCE 1934

SUPPLYING PURE ARTICLES.

ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எழுதவும்

உயர்ந்த கஸ்தூரி, குங்குமப்பூ,
பச்சைகர்பூரம் முதலியவைகளுக்கு
மிகவும் சிறந்த இடம்.

Wholesale Dealers in:
Musk Saffron and Ayurvedic Drugs etc.

CORRESPOND IN HINDI OR ENGLISH

Shri Markanday Musk Depot

(Regd.)

Importers and Exporters

Civil Lines, LUDHIANA, PUNJAB.

கஸ்தூரி, கோரோசனை, பச்சகர்பூரம்,
குங்குமப்பூ முதலியவைகளுக்கு
நம்பிக்கையான இடம்

**BHANOT BROTHERS**

(REGD.)

**Wholesale Musk, Saffron and Indian Drugs Merchants,**

**LUDHIANA - PUNJAB**

ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் எழுதவும்

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

***K. L. TALWAR & BROS.,***

MUSK MERCHANTS,

**P. B. No. 17, LUDHIANA.**

விலைப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.



# வைத்திய சந்திரிகா


தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

| | | |
|---|---|---|
| தொகுதி 32 | சாதாரண ஐப்பசி | பகுதி 11 |
| Vol. 32 | 1970 நவம்பர் | No. 11 |


நமச் சிவகுமாராய.

॥ श्री धन्वन्तरये नमः ॥

उदेतु हृदयाकाशे गुरुवर्यकलानिधिः ।
यदीयचन्द्रिका वैद्यसंशयध्वान्तनाशिनी ॥

## நிழல்தரும் மரம் சாய்ந்தது

கடும் வெய்யிலில் அடி சுட நடந்துபோகும் வழிப்போக்கர்களுக்கு களைப்பு ஏற்படும் தருணத்தில் மிகவும் அடர்ந்த ஓர் மரத்தின் நிழல் கிடைத்தால் மரத்தின் நிழலில் இருந்துகொண்டு தாபத்தைப்போக்கி ஆறுதல் பெறுகிறார்கள் அல்லவா? அந்த மரம் ஓர் அழகிய ஒட்டு மாமரமாக இருந்தால் அதுவும் தளிரும், பூவும், காயும், பழமும் நிரம்பியதாக இருந்தால் களைப்புற்றவர்களுக்கு எவ்வளவு ஆறுதலாக இருக்கும். பூவின் மணம் விச, தளிரின் குளிர்ச்சியுடன் பழுத்த பழங்களைச் சுவைத்து சந்தோஷமாக இருக்க முடியும். வண்டுகள், கிளிகள், குருவிகள், மற்றும் பல பறவைகள் இந்த மரத்தின் சுவைகளை அனுபவித்து ரம்யமாக சப்தம் செய்து வாழ்நாளை கவலையில்லாமல் போக்குகின்றன.

இம்மாதிரியான பல விருக்ஷத்திற்கு ஒப்பானவர் நமது மதிப்பிற்குரிய K. பாலசுப்ரமணிய அய்யர் அவர்கள். வடமொழி தென்மொழி வைத்யம், வைதிகம் இவைகளுக்கு ஐயரவர்கள் காட்டிவந்த ஆதரவு மிகவும் அரியது. ஐயரவர்களும் தந்தையாராகிய ஸ்ரீமான் V. கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள் வளர்த்த அழகிய பல விருக்ஷம். அது சாய்ந்து அழிந்துபோய் விட்டதைக் கேட்க மனம் அடங்காத்துயரம் அடைகிறது.

ஐயரவர்கள் செய்துள்ள பணிகள் பல. அதில் வெங்கடரமண ஆயுர்வேத கலாசாலை, சென்னை சம்ஸ்கிருத கலாசாலை இரண்டும் ஐயரவர்களின் இரண்டு கண்கள் போன்று விளங்கின. வடமொழி வளர்ச்சிக்குத் தமிழ்நாட்டில் ஏற்பாடு இல்லாத இந்தக்காலத்தில் கூட கேரளம், கர்நாடகம், ஆந்திரம் முதலிய தேசங்களிலிருந்து சம்ஸ்கிருதப் பயிற்சியிலும் ஆயுர்வேதப் பயிற்சியிலும் மாணவர் களைச் சேர்த்துக்கொண்டு அந்த ஸ்தாபனங்களை பாழாக்காமல் பார்த்துக்கொண்ட பெருமை ஐயரவர்களுக்கே உரித்தானதாகும். சென்னை சர்வகலாசாலை செனட் சபையில் ஐயரவர்கள் அதிக முயற்சியின்றியே படித்தவர்களுடையவும் விவேகிகளுடையவும் ஆதரவால் மெம்பராக வெகுகாலம் இருந்துள்ளார்.

B. I. M. என்ற ஆயுர்வேத பட்டப்படிப்பை அவர்தான் உருவாக்கியது.

பல வைத்ய மாநாடுகளிலும் தர்மபிரசார சபைகளிலும் ஐயரவர்கள் அன்புடன் தலைமைதாங்கி பல நல்லுரைகள் ஆற்றி யுள்ளார்கள். ஐயரவர்கள் ஆஜானுபாகு என்ற லட்சணம் பொருந்தியவர். அவர் கைகளை வானளாவ முகம் சிரிக்கப் பல விஷயங்களை உள்ளங்கை நெல்லிக்கனிபோல தெளிவுபடுத்தி சொற்பொழிவு ஆற்றுவதைப் பார்த்துக்கொண்டு இருந்தாலேயே பசிதீரும். கேட்டுக்கொண்டு இருந்தால் கேட்பானேன். ஐயரவர் களின் ஒளி நிறைந்த முகத்தை நேரில் ஒருதடவை பார்த்து விட்டால் பிறகுயாராலும் மறக்க முடியாது. இந்த ஞான ஒளியை வெளிப்படுத்துவதாலேயே அவருக்கு பாலசுப்ரமணியன் என்ற பெயர் அமைந்தது போலும். சிறு குழந்தைகள் போலவே ஐயரவர்கள் எல்லோரிடமும் பழகிவந்தார். ஐயரவர்களுடன் பல தடவைகளில் பேசிக்கொண்டு இருந்தபோதெல்லாம் அவருடன் பேச்சை நிறுத்தவேண்டியுள்ளதே என்ற எண்ணமே உதிக்கும். அவருடைய படிப்பை, அவருடன் தனியாகப்பேசி நன்கு பழகிய பண்டிதர்களால்தான் அறியமுடியும். ஆங்கிலத்தில் தமிழில், சம்ஸ்கிருதத்தில், ஐயரவர்களுக்கு ஆழ்ந்த அறிவு இருந்ததுடன் வேதாந்தம் முதலிய பல சாஸ்திர நூல்களை உயர்ந்த பண்டிதர்கள்

மூலம் பாடம் கேட்டு நல்ல முதிர்ந்த ஞானம் பெற்றவர். "காமகோடி ப்ரதீபம்" என்ற பத்திரிகையை மிகவும் நல்ல முறையில் நடத்திவந்தார்.

தற்சமயம் உலகில் பிரம்ம ஞானியாக போற்றப்படும் ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கரபகவத் பாதாளிடம் ஐயரவர்களுக்கு அந்தரங்கமான பக்தி உண்டு ஸ்ரீ ஆசாரியர் அவர்களுக்கும் ஐயருடைய எல்லாவிதமான சிரேயஸ்களிலும் மிகுந்த கவனம் உண்டு. ஆகவே குருவிற்குத்தகுந்த இம்மாதிரி நல்ல சிஷ்யர்கள் வேறு அதிகம் இருக்கமுடியாது.

இம்மகானின் மறைவு இத்தலைப்பின் கீழ் எழுதப்படும் கட்டுரையிலிருந்தே உலகிற்கு எவ்வளவு நஷ்டம் என்பது விளங்கும்.

எல்லாம் நிறைந்த ஐயரவர்களை இழந்தோம். அவர் ஆத்மா திவ்யரூபத்துடன் எல்லோரையும் காப்பாற்றவேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறோம்.

---


# நியூ லக்ஷ்மீ டிஸ்பென்ஸரி

(நியூ பிருந்தாவனம் சமீபம்)

கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை.

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும்
சிறந்த முறையில் வைத்யம்
செய்யப்படும்.

வைத்யர்
N. வைத்யநாதன், R. M. P.

# ஸஹஸ்ரயோகம்

## ஓஷ்டரோக நிதானம்

மத்ஸ்யம், பன்றிமாம்ஸம், உளுத்தம்பருப்பு, இவைசாப்பிடுவது இதோடு கூடவோ இல்லாமலோ தயிர், பால், மத்யம், கரும்புச்சாறு முதலியன சாப்பிடுவது, பல் தேய்க்காமல் இருப்பது, அதிகம் தூங்குவது, விரேசனம், ஸிராவேதம், வமனம், கண்டூஷம் இவை விதிப்படி செய்யாமல் இருப்பது, இவைகளால் திரிதோஷங்கள் கோபித்து முகரோகங்களை உண்டுபண்ணுகின்றன. இந்த முக வியாதிகள் மொத்தம் எழுபத்திஐந்து அவற்றின் விவரம் – ஓஷ்ட (உதடு) வியாதி பதினொன்று, கண்ட (கன்னம்) த்தில் ஒன்று எகிறில் பதின்மூன்று, நாக்கில் ஆறு, பல்லில் பத்து, உள்நாக்கில் எட்டு, தொண்டையில் பதினெட்டு, வாயில் எட்டு, இவ்விதம் மொத்தம் எழுபத்திஐந்து நோய்களுக்கும் முகரோகங்கள் எனப்பெயர். அவற்றுள் உதடு ரோகங்கள் 11, இவைகளின் லக்ஷணம். உதடு இரண்டாகப் பிளந்து வந்தால் அது கண்டோஷ்டம் எனப்பெயர். சங்கு, கொம்பு, நாதசுரம், முகவீணை, முதலியன (ஊதுவதால்) வாசிப்பதாலும், அதிகம் தும்முதலாலும் வாயு கோபித்து இரண்டு உதடுகளும் புண்ணாகி வலியுடன் வீங்கி வறவறப்பாக சிறு மணல்மாதிரி சிறு சிரங்குகள் உண்டானால் அது ஓஷ்டபாகம் எனப்படும். நெருக்கமாகக்கடுகு கடுகாகவெடித்து உதடு ஒழுகினால் இது பித்தபாகம் எனப்படும். சிலேஷ்மத்தால் வெளுப்பாக வீங்கி கனமாக அனேகம் சிரங்குகள் உண்டானால் சிலேஷ்மபாகம் எனப்பெயர். பல நிறங்களாகப் பழுத்தும் பழுக்காமலும் பலசிரங்குகள் உதட்டில் உண்டாகி வறவறப்பாக இருக்கும். இது ஸன்னிபாத பாகம். ரக்தத்தால் சிகப்பாக உதடு வீங்கி இலந்தைப்பழம்போல் ஆகும், ரக்தம் ஒழுகும், இது ரக்தபாகம். இதை உபேக்ஷித்தால் அது மூக்கில் அர்புதமாக வரும். ரக்த பாகத்தில் ரக்தம் க்ஷயத்தை அடையும்பொழுது உதட்டில் அர்புதம் ஆகும். இது ஓஷ்டார்புதம். மாம்ஸ தோஷத்தால் உதடு பருத்து பழுத்து கிருமி உண்டானால் மாம்ஸபாகம் எனப்பெயர். மேதஸ்ஸால் அதிகம் வீங்கி வலியுடன் மிருதுவாக ஏற்பட்டால் மேத: பாகம் எனப்பெயர். அடிபட்டு வீங்கி உதடு விண்டுவந்தால் க்ஷதபாகம் எனப்பெயர். உதடு அரிப்பு உண்டாகி வீங்கி கட்டியாய் நீர் கொப்பளம்போல் வந்தால் ஜலார்புதம் எனப்பெயர். இவ்விதம் பதினேறு வியாதிகள்

உண்டாகும். அவை கண்டோஷ்டம், ஒஷ்டகோபம், பித்தபாகம், சிலேஷ்மபாகம், ஸன்னிபாதபாகம், ரக்தபாகம் அர்புதம், மாம்ஸ பாகம், மேதபாகம், க்ஷதபாகம்

இவைகளின் சிகித்ஸை : கண்டோஷ்டத்தை இருபக்கமும் புண்செய்து உரைத்து இரண்டையும் சேர்த்துத்தைத்துப் பிறகு விரணசிகித்ஸை செய்யவும். தலைக்கு யஷ்டி ஜோதிஷ்மத்யாதி தைலத்தால் தேய்க்கவும். வாதஹர தைலத்தாலும் மதுரஸ் கந்த தைலத்தாலும் நஸ்யம் செய்யவும். ஒஷ்டபாகத்திற்கு வாதஹரமான சிகித்ஸையும் மஹாஸ்நேஹத்தில் நனைத்த துணி போடுவதும் நலம். குங்கிலியம், மெழுகு, தேவதாரு, நெல்லிக் காய், அதிமதுரம், குக்குலு, இவை பொடிசெய்து நெய்யில் குழைத்துத் தேய்க்கவும், புண்ணாக இருந்தால் கொட்டைமுத்துத் துளிரைப் பாலில் வேகவைத்து ஒத்தடம்கொடுத்து வேதுபிடித்து கண்ட ஒஷ்டத்திற்குபோல் தலைக்குத் தைலமும் நஸ்யமும் செய்யவும். பித்தபாகத்திற்கு அட்டை கடிக்கச்செய்து ரக்தம் களைந்து குங்கிலியம், அதிமதுரம் லோத்திரப்பட்டை, இவை அரைத்து தேனில் தடவவும். சீந்தில் அதிமதுரம், பத்தங்கங் களால் தயார் ஆனதைலம் தேய்க்கவும் க்ஷதபாகம் ரக்தபாகம் இவைகளுக்கு பித்த பாகம்போலச் செய்யவும். சிலேஷ்மபாகத் திலும் முதலில் இந்த சிகித்சை செய்துபிறகு திரிகடு, யவக்ஷாரம், இவை தேனில் தேய்க்கவும். பிறகு கபஹரங்களான தூமம் கண்டூஷம் முதலியன செய்யவும். மேதப்பாகத்தை வேதுபிடித்து கனமாகச் சூடுவைத்து லோத்திரப்பட்டை திரிபலை, நாவல் பட்டை தேனில் அரைத்துத் தேய்க்கவும். இது ஸவுகரியமாகிற வரையிலும் தேய்க்கவும். ஜலார்புதத்தை உடைத்து சுத்தம் செய்து தேன் கலந்து தீக்ஷ்ணங்களான மிளகு முதலியதால் தேய்க்கவும். கறுத்தாலும் குழி விழுந்தாலும் க்ஷாராக்னி பிரயோகம் செய்யவும்.

(ஒஷ்டரோக சிகித்சை முற்றிற்று)

---

## கண்டரோகம்

தொண்டை கட்டியாகவும் சுண்டைபோல் சிறிதாகவும் வீக்கம் ஏற்பட்டு ஜுரம் குத்துவலி உண்டாய் பழுத்து சீழ்வரும். சிறு கண் உண்டாய் புண் காயாமலும் இருக்கும். காலக்கிரமத்தில் அவ்விடம் குன்றுமணிபோல் கிளம்பி பெரிதாய் கோழியின் பூபோல் ஆகும். இதற்கு கண்டாலஜி கண்டார்சஸ், கண்டார்புதம் என்றெல்லாம் பெயர் சொல்லுவர். அதிகக் காலப்பழக்கம் ஏற்பட்டு

ரக்தம் பெருகி துர்நாற்றம் உண்டானால் அது அஸாத்தியம் எனக் கூறவேண்டும். கண்டரோகத்திற்குச் சிகித்சையில் முதலில் நீருக்கு சிகித்ஸை செய்யவேண்டும். உடைந்தால் புண்ணுக்கு வேண்டிய சிகித்சை செய்யவேண்டும். பால் ஆவி பிடிக்க வேண்டும். அதிமதுரம், வாலுளுவையரிசி, லோத்திரப்பட்டை, கொட்டைக்கரந்தை, நன்னாரி, நெய்தல், பேய்ப்புடல், மணத்தக்காளி, இவைகளால் தயாரிக்கப்பட்ட தைலங்கள் அப்யங்கத்திற்கு நல்லது.

## தந்தரோக நிதானம்

பற்களில் உண்டாகும் நோய் பத்துவிதம் (1) சீததந்தம் (இதற்கு தாலனம் என்றும் மற்றொரு பெயர்) (2) தந்தஹர்ஷம் (3) தந்தபேதம் (4) சாலம் (5) கராளம் (6) அதிதந்தம் (7) பூதி கந்தம், சர்க்கரா என்றும் பெயர் (8) கபாலிகா (9) ச்யாவம் (10) பிரலூனம் இதற்கு பூயரக்தம் என்றும் கிருமிதந்தமென்றும் வேறு இரண்டு பெயர்கள் உண்டு. மற்ற நூல்களில் 12 விதங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே சொன்ன பத்து விதங்களுடன் பஞ்ஜனகம் ஹனுமோக்ஷம் என்ற இருவிதங்கள் சேர்த்து 12 பேதங்களாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

பற்கள் குளிர்ச்சியால் அதிக வேதனையும் உஷ்ணத்தால் சுகத்தையும் அடைந்தால் அதற்கு சீததந்தம் எனப்பெயர். பற்களில் காற்று, புளிப்பு, குளிர்ச்சி, இவை படமுடியாமல் போனால் தந்த ஹர்ஷம். பற்களில் வலி, தரிப்பு, விட்டுபோவதுபோல் தோன்றல், இவை இருந்தால் தந்தபேதம் எனப்பெயர். சாப்பிடும்பொழுது வலி, ஆட்டம், அதிகம் இருந்தால் தந்தசாலம் எனப்பெயர். பயங்கரமானபற்கள் முளைத்தால் கராளம் எனப் பெயர் (தெத்திப்பல்). அதிகப்படியான பற்கள் ஏற்பட்டால் அதிதந்தம் எனப்பெயர். இதற்கு வர்தனமென மற்றொரு பெயர். பற்களை நன்றாகத் தேய்க்காமல் அவைகளில் அழுக்கு ஒன்று சேர்ந்து காய்ந்து பொரிப்பொரியாக ஆகி பிறகு நாறினால் சர்க்கரா எனப்பெயர். இது முற்றினால் அதில் ஒருவித கிருமி உண்டாகும். அது எகிறைச் சாப்பிடும். இதற்குக் கபாலிகை எனப்பெயர். ரக்த பித்தத்தால் பல்லில் கருப்புவிழும். இதற்குச்யாமம் எனப்பெயர். திரிதோஷ கோபங்களால் பற்களின் அடியை ஆச்ரயித்து பற்களுக்கு இடையில் வீக்கம், இளைப்பு, ரக்தம், பல் ஆட்டம். பழுத்து கிருமி உண்டாதல் இவை நேரும். இதற்கு கிருமி தந்தம் எனப்பெயர். இவ்விதம் பற்களில் பத்து வியாதிகள். எகிறில் வியாதிகள் இனி சொல்லப்படும்.

## எகிறு நோய்கள்

கபம் ரக்தம் இவைகளால் சோணிதம் தூஷித்து எகிறைக் தின்று மிருதுவாகக்குதறி மிகவும் சங்கடம் உண்டானல் இதற்கு சீதாதம் எனப்பெயர். எகிறு சூடாகவும் சிகப்பாகவும் ஆகி வீங்கி ரக்தம் ஒழுகி அது வெளியில் போகாமல் பல் இளகி எகிறு வலியும் ஏற்பட்டால் பித்த ரக்தங்களால் ஏற்பட்ட பித்தோபகுசம் எனப் பெயர். பல்லுக்கு அடியில் வீங்கி இலந்தைக்கொட்டைபோல் ஆகி கட்டியாகப்பழுத்து எகிறில் வலியும் சீழ்வடிதலும் ஏற்பட்டு உள்ளும் வெளியும் வலியுடன் வீங்கி நன்ருகச் சிவந்து உடைந்து ரக்தம் சீழ் ஒழுகினுல் தந்தவித்ரதி எனப்பெயர். ரக்த பித்தங் களால் அடியில் வீங்கி வலியுடன் ஊத்தை வெளிவந்தால் ஸுஷிரம் எனப்பெயர். ஸன்னிபாதஜ்வரத்துடன் பல் இளகி எகிறில் துளை ஏற்பட்டு சீழ்விழுந்தால் மஹாஸுஷிரம் எனப் பெயர். கடைவாய்ப்பல்லில் ஆணிபோல் புறப்பட்டு கழுத்து, கண்டம், முதலியன வலித்து ஆகாரம் செல்லாமல் அதிகம் சங்கடம் உண்டானுல் அதிமாம்ஸம் எனப்பெயர். பல் தேய்க்கும் பொழுது எகிறு விண்டு பல் இளக்கம் உண்டானுல் விதர்ப்பை எனப்பெயர். பல்லின் அடியில் ஏற்படும் வியாதிகளுக்கு உடன் சிகித்ஸை செய்யாமல் அது முற்றி எகிறில் ஒரு வியாதியாக ஏற்பட்டு தாமரைத்தண்டுபோல் ஆகி பழுத்து சீயும் ரக்தமும் வரும். மாம்ஸம் விண்டுவரும். இதற்கு கதி எனப்பெயர். இது திரிதோஷம், ரக்தம், ஸன்னிபாதம், இவைகளால் காணு மாதலால் ஐந்து பேதமாக இதைப்பிரிக்கலாம். இது ஐந்துக்கும் கதி எனப்பெயர். இவைகளின் பேதத்தை லக்ஷணங்களால் தெரிந்து சிகித்சை செய்தால் சமனம் ஏற்படும்.

## ஜிஹ்வாரோகம்

வாதத்தால் வறவறப்பாகக் கறுத்து நாக்கு வீங்கினுல் அது வாததூஷிதை எனப்பெயர். பித்தத்தினுல் சிவந்து நுரைத்து சீ வடியும். சிறுசிறு சிரங்குபோல் கிளம்பி சூடு எரிச்சல் இவை களால் தொடமுடியாமல் ஆகும். இதற்கு பித்ததூஷிதை எனப் பெயர். சிலேஷ்மத்தால் இலவம்பூபோல் கூராகச் சிவந்து தடிப் பாக இருந்தால் சிலேஷ்ம தூஷிதை எனப்பெயர். கப பித்தங் களால் நாக்கிற்குகீழ் வீக்கமும் நாக்கு சுரணையில்லாமல் மத்ஸியத் தின் கந்தமும் இருந்தால் அலஸம் எனப்பெயர். அடி நாக்கில் வீங்கி வேருெரு நாக்கு போல் கிளம்பி நுணி கூராகவும் இருக்கும். கபபித்த ரக்தங்கள் கோபித்து வாய் விண்டு ஊத்தை வெளிவரும் கஞ்சி சாதம் முதலியன இறங்காது இதற்கு அதி ஜிஹ்வா எனப் பெயர். நாக்கிற்குமேல் அவ்விதம் ஏற்பட்டால் உபஜிஹ்வா எனப்பெயர்.

## தாலுரோகங்கள்

உள்நாக்கில் சிரங்கு புறப்பட்டு வலியுடன் கறுப்பாகவும் ஏற்பட்டால் தாலுபிடகம் எனப்பெயர். மீன் முள்போல் உள் நாக்கில் மிருதுவாகவும் தொட்டால் சொறசொறப்பாகவும் மூக்கில் ரக்தம் வருவதுடன் தொண்டையிலும் கழுத்திலும் தடையும் உண்டாகி இருமல் வரட்சி வாந்தி, இவைகள் உண்டானல் களசுண்டி எனப்பெயர். வலி குறைந்து உள் நாக்கில் சதை வளர்ந்து ஒன்றுக்கொன்று சேர்ந்து இருந்தால் தாலுஸம்ஹதி எனப்பெயர். உள்நாக்கினல் தாமரைப்பூபோல் வந்தால் அர்புதம். சிலேஷ்மத்தால் ஆமைபோல் உண்டானல் கச்சபம் : இலந்தைக்கொட்டைபோல் இருந்தால் அது புப்புடம். உள்நாக்கில் பழுத்து சீழ் வந்து நாற்றமும வலியும் சூடும் இருந் தால் பூதிபாகம் எனப்பெயர். அதிக சரீரசிரமத்தாலும் ஜ்வரம் முதலியவைகளாலும் உள் நாக்கு காய்ந்துபோகும். இதற்கு தாலுசோஷம் எனப்பெயர்.

## களரோகங்கள்

நாக்கிற்குக் கீழ் கழுத்தில் பெரிதான மாம்ஸமுளை ஏற்பட்டு பித்தத்தினல் உடன்பழுத்து சூடு எரிச்சல் முதலியன காணும். இது சீக்கிரம் விருத்தியடையும். ஜ்வரம், தாஹம் காணும் இதற்கு ரோகிணி எனப்பெயர். இந்த வியாதி மிகவும் அஸாத்தியம் ஒன்றரை நாளிலேயே கொல்லக்கூடியது வாதத்தினல் கன்னத் திற்குக் கீழ்பாகம் கண், காது, இவைகளில் வலியுடன் சீக்கிர விருத்தி அடைந்தால் வாதரோகிணி எனப்பெயர். வெளுப்பாக பறபற என இருந்தால் சிலேஷ்மரோகிணி எனப்பெயர் ரக்தத் தினல் காதிற்குள் வீங்கி பிளந்து பித்தலக்ஷணமும் கண்டால் ரக்தரோகிணி எனப்பெயர். ஸர்வலக்ஷணமும் சேர்ந்தால் சன்னி பாத ரோகிணி எனப்பெயர். எல்லா தோஷங்களும் சேர்ந்து கழுத்தில் இலந்தைக்கொட்டைபோல் உண்டானல் கிரந்திகம் எனப்பெயர். தொண்டையில் நெல்லைப்போல் மாமிசங்கள் வளர்ந்தால் சாலூகை எனப்பெயர். வட்டமாக இருந்தால் விருந்தம் எனப்பெயர். பருத்திக்கொட்டைபோல் மிகவும் கடுகடுப் பாகத் தொண்டையில் உண்டானல் துண்டிகேரிகை எனப்பெயர். தொண்டையில் உள்ளிலும் வெளியிலும் நீர் சேர்ந்து வாழைக் காய் முதலியனபோல் வரும். ஜ்வரம் உண்டாகும். ஊத்தை வரும். இதற்கு களௌகம் எனப்பெயர். தொண்டைக்குள் வீங்கி வெளிப்பக்கம் பூராவாகவும் வீங்கி வலி இல்லாமல் ரக்தம் வந்து ஒன்றும் விழுங்கமுடியாமல் போனல் வலயம் எனப்பெயர். முள்முருங்கைக் கட்டைபோலவும், முள் நிறைந்த தடிபோலவும்,

தலை, கண் முகம் முதலியவற்றில் வலியும் பழுப்பும் அதிகம் ஏற்பட்டால் சதக்னீ எனப்பெயர். தொண்டைக்குள் வீங்கி பழுத்து சீழ் விழுந்தால் களவித்திரதி எனப்பெயர். கழுத்து வலித்து வீங்கி சிறு பழுப்பு ஏற்பட்டால் களார்புதம் எனப்பெயர். வாயுவினல் கழுத்தில் வீங்கி அதிக குத்துவலியுடன் சிவந்து தடிப்பாக சிவந்த நரம்புகள் ஏற்பட்டால் களகண்டம் எனப்பெயர். உள்நாக்கு அதிகம் வளரும். ருசி தெரியாமல் போகும். கடுகடுத்து பிப்பு உண்டாகும். இது சிலேஷ்மகண்டம். மேதஸ்ஸினல் இவ்விதம் வந்து வீங்கி தடித்து சூட்டுடன் பேசமுடியாமல் தொண்டை கம்மிக் கழுத்து திருப்பமுடியாமல் போனல் மேதோகண்டம் எனப்பெயர். தொண்டையில் ஜலம் குறைந்து தொண்டை கம்மி வீங்கி கனத்து வரட்டு இருமலும் இருந்தால் ஸ்வரஹானி எனப்பெயர்.

## உள்வாய் முழுவதிலும் வரும் ரோகங்கள்

வாதம் தோஷித்து உள்வாய் முழுவதும் புண்ணை உண்டு பண்ணிச் சிகப்பாகவும் வறவறப்பாகவும் மிருதுவாயும் இளக்கமாயும் இருந்து முள்போல் நிறைந்து வாய் திறக்கமுடியாமல் ஆனல் வாதமுகபாகமெனப் பெயர். முகரோகங்களாலும் குல்மரோகத்தாலும் வாயு மேல் முகமாக துர்நாற்றத்துடன் வந்தால் ஊர்த்வகதம் எனப்பெயர். பித்தத்தினல் பழுத்து உள்வாய் முழுவதும் சிறிதாகச் சிவந்து புண்களுண்டாகி வீங்கினல் பித்தமுகபாகம் எனப்பெயர். சிலேஷ்மத்தால் வெளுத்து சூடு குறைந்து இருந்தால் சிலேஷ்ம பாகம் எனப்பெயர், கவிள் தடத்திற்குள் சிவந்து புறப்பட்டால் அர்புதம். இந்த அர்புதத்தைத் தேய்த்தாலும் அறுத்தாலும் விருத்தியாகித் தொந்திரவு செய்யும். நாலு லக்ஷணமும் சேர்ந்து கண்டால் சன்னிபாத முகபாகம். பல் தேய்க்காததால் முகத்தில் துர்நாற்றம் ஏற்பட்டால் பூதிவக்த்ரம் எனப்பெயர்.

## சிரோரோகங்கள்

புகை, பனி, வெய்யில், வியர்வை இவை அதிகம் தாக்குவதாலும், தூக்கம் அதிகம் விழிப்பதாலும், ஜலத்தில் அதிகம் நீந்தி விளையாடுவதாலும், அதிகத் தூக்கத்தாலும், தலையை அதிக உயரத்தில் வைத்துப் படுத்துக்கொள்ளுவதாலும், அதிக பள்ளத்தில் வைத்துக்கொள்ளுவதாலும், கடற்காற்று அதிகம் படுவதாலும், துக்கத்தாலும், கள்ளு சாராயம் குடிப்பதாலும், அதிகம் சத்தம் போடுவதாலும், அங்கங்களில் ஏதாவது கெடுதல் வருவதாலும், கீழ்பக்கமாக அதிகம் பார்ப்பதாலும், அதிகம் துர்கந்

தத்தை மூர்வதாலும், தோஷங்கள் தலையில் பிரவேசித்து கீழே சொல்லப்படும் வியாதிகளை உண்டுபண்ணுகின்றன. வாத கோபத்தால் நெற்றிக்கட்டில் அதிக வலியும், நெற்றி புருவம் இவை ஒன்று சேருமிடத்தில் பிளப்பதுபோல் வலியும், காது, கண், கழுத்து இந்த இடங்களில் அதிக வலியும், மூக்கில் ஜலம் வருவதும், நாடி துடிப்பதும், கைகளால் மர்த்திப்பதால் கொஞ்சம் சுகமும் ஏற்படும். இன்னும் பல கஷ்டங்கள் உண்டாகும். இது வாத சிரஸ்தாபம். தலையில் ஒரு பாகத்தில் மட்டும் குத்துவலி முதலியன கண்டால் அர்த்தாவபேதம் எனப்பெயர். இது மாதம் ஒருதரம் அல்லது பக்ஷத்தில் ஒருதரம் அதிகமாக உண்டானால் கண் காது இவைகள் கெட்டுப்போகும். பித்தத்தால் தலைவலி வரும். தலையில் புகைச்சல் உண்டாகும். ஜ்வரம், வியர்வை, கிருகிருப்பு, கண்சூடு இவை பகலில் அதிகமாகவும், இரவு குறைந்துமிருக்கும். சீதசிகித்ஸையால் கொஞ்சம் குறையும். இது பித்த சிரஸ்தாபம். சிலேஷ்மத்தால் வரும் தலைவலியில் அருசி, குளிர், தலைசூடு, சோம்பல், தலை அதிகம் கனத்தல், பகலில் வலி குறைந்து இரவில் அதிகமாகுதல், காதுபிப்பு, வாந்தி, இமை வீக்கம் காணும், இது சிலேஷ்ம சிரஸ்தாபம். ரக்த சிரஸ்தாபம் பித்தசிரஸ்தாபம்போல். ஆனால் வலி பித்தசிரஸ்தாபத்தைவிட அதிகம் இருக்கும். எல்லா லக்ஷணங்களும் கலந்து இருந்தால் அதுஸந்நிபாதசிரஸ்தாபம். ஆகாரத் திரவிய தோஷத்தால் தலையில் விஷாம்சம் சேர்ந்து ரக்தமும் சீயும் கலந்து ஸன்னிபாத கோபத்தால் தலைக்குள் கிருமிக்கூட்டம் ஏற்பட்டு அவை ரக்தத்தைச் சாப்பிடும்பொழுது பல சங்கடங்கள் உண்டாகும். சித்தபிரமம் ஜ்வரம், காஸம், வறவறப்பு, வீக்கம், பலக்குறைவு, துர்கந்தம், விரணம், கன்னம் சிரஸ்ஸு இவைகளில் ஏற்படும் பிப்பு, சோகை, மூக்கில் சிகப்பு வெள்ளை கலந்த ஜலம் வடிதல், காதுகளில் சத்தம் ஆகிய இவை காணும். இது கிருமி சிரஸ்தாபம். தோஷங்கள் வாதத்தை முன்னிட்டு சிரஸ்ஸை விரைக்கச்செய்யும். இது எல்லா சமயத்திலும் ஏற்பட்டால் சிர:கம்பம் எனப்பெயர். தோஷங்கள் பித்தத்தை முன்னிட்டு ரக்தத்துடன் சேர்ந்து பொட்டில் வீக்கத்தை உண்டுபண்ணி வலி, சூடு, சிகப்பு புத்திபிரமம், தாஹம், பிரலாபம் முதலிய பல தொந்திரவு செய்யும். முகம் மஞ்சள் நிறமாகும். இது தொடங்கின உடன் சிகித்சை செய்தால் சுகப்படும். இல்லாவிடில் மூன்று நாளில் மரணம் நேரிடும். இதற்கு க்ஷிப்ரகாரி என்றும் சங்ககம் என்றும் பெயர். வாதம் பித்தத்துடன் சேர்ந்து புருவம், நெற்றி, கண் இவைகளில் பலவிதமான வலியை உண்டாக்கும். சூரிய உதயத்தில் வலி உண்டாகி உச்சம்வரையிலும் அதிகரிக்கும். பசி இருந்தால் மிகவும் அதிகப்படும். சீதம் உஷ்ணம் முதலியன சில சமயம்

சுகமாகவும் சில சமயம் துக்கமாகவும் வியவஸ்தை இல்லாமல் இருக்கும். பிறகு குறையும். இதற்கு சூரியாவர்த்தம் எனப் பெயர். இவ்விதம் சிரோரோகம் பத்து. கர்ப்பத்தில் இருக்கும் குழந்தைக்கு சிரஸ்ஸில் வாதகோபத்தால் வீக்கம்போல் உண்டாகி வலி இல்லாமல் இருந்தால் உபசீர்ஷகம் எனப்பெயர். பிடகா அர்புதம். வித்ரதி என்ற மூன்று வியாதிகளை தோஷ லக்ஷணம் கொண்டு ஊகிக்க வேண்டும், வாதம் அதிகமானால் வாதவித்ரதி, பித்தம் அதிகமானால் பித்தவித்ரதி, சிலேஷ்மம் அதிகமானால் சிலேஷ்ம வித்ரதி இவ்விதமே பிடகையும் அர்புதமும் காண்க பித்தம், ரக்தம், கபம், கிருமி இவை காரணமாக சீழுடன் காணும் சிரங்குகளுக்கு அருஷகம் எனப்பெயர் கப வாதங்களால் தலையில் அதிகம் அரிப்பும், சொரியும், மயிர் உதிரலும், தோல் உரிதலும் காணும். இது தாருணமெனப்படும். ரோம கூபத்தில் பித்த வாதத்துடன் விருத்தியடைந்து ரோமங்களை உதிரச்செய்யும். அப்பொழுது கபரக்தம் ரோம கூபத்தை அடைந்து பிறகு மயிர் வளராமல செய்தால் அது இந்திரலுப்தம் எனப்படும். சிலர் இதை குஞ்சா சாசா எனவெல்லாம் சொல்லுவர். கலதியும் இந்திரலுப்தப்போல்தான் ஆனால் கலதிக்கு ரோமம் மெதுவாகப் போகும். இந்திரலுப்தத்தில் சீக்கிரம் போகும். வாதகலதியில் நெருப்புப்பட்ட இடம்போல் ஆகும். பித்தகலதியில் மஞ்சள் நரம்புகள் உண்டாகும் சிலேஷ்மகலதியில் தோல் கெட்டியாகவும் சூடாகவும் இருக்கும் எல்லா தோஷங்களும் சேர்ந்துவரும் கலதியில் எல்லா லக்ஷணங்களும் காணும். நகத்தின் பிரபை போலவும் தீப்புண் போலவும் சூடு உண்டானால் இந்நோய் அஸாத்யமாக நினைக்கவேண்டும். தேஹ சிரமத்தாலும், துக்கத்தாலும், கோபத்தாலும், சரீரச்சூடும், திரிதோஷமும் கோபித்து தலையில் சேர்ந்து தலை நரைத்துப்போம். இதைப்பலிதமென்பர் வாதநரை ஜலத்தின் நிறமாக இருக்கும் பித்தநரை மஞ்சள் நிறமாகும். கபநரை அதிகம் வெளுத்து இருக்கும் ஸந்நிபாத நரையில் எல்லா லக்ஷணமும் கலந்து இருக்கும். ஸன்னிபாத கலதியும், பலிதமும், வயதாகி ஏற்படுவதும் அஸாத்யம் இது ரஸாயனப் பிரயோகத்தால்தான் தீரும்.

## தந்தரோக சிகித்சை

சீததந்தத்தை வேது பிடித்து அடிபாகத்தைத் தேய்த்து ஒத்தடம் கொடுக்கவும் பிறகு எண்ணெய் தேய்த்து கோரைக் கிழங்கு, மாதளம்பழ ஓடு, மாக்ஷிகம், இந்துப்பு, நாகக்கொட்டை, திரிபலை, சுக்கு இவை பொடி செய்து தேன் சேர்த்து வாயில் அடைத்துவைத்துக்கொள்ளவும். நால்பால் மரக்கஷாயத்தால்

நஸ்யம் செய்யவும். தந்தஹர்ஷம், தந்தபேதம் இவைக்கு வாத ஹரமான சிகித்ஸை எல்லாம் குணமானது. அதிமதுரம் எள்ளு இவை போட்டு வேகவைத்த பாலை வாயில் அடக்கிவைத்துக் கொண்டால் இவை இரண்டும் குணப்படும். தந்தசாலத்திற்கு தசமூலகஷாயம் எண்ணெய் சேர்த்து வாயில் அடக்கிவைத்துக் கொள்ளவும். லோத்திரப் பட்டை, திப்பிலி, துத்தம், பத்தங்கம், திரிபலை, இவை தேனில் குழைத்துத் தேய்க்கவும். ஸ்நிக்தங்க ளான நஸ்யம் கண்டூஷம் செய்யவும் அதி தந்தத்தை உரைத்து காரம் தேய்த்து அற்றுப்போனால் கிருமிதந்தத்தைப்போல் பிடுங்கி விட்டு சிகித்ஸை செய்யவேண்டும். ரக்தம் வருவது நிற்காவிடில் ஒற்றடம் கொடுத்து விரணசிகித்ஸைகள் செய்யவும் சர்க்கரா தந்தத்திற்குப் பல் அடியை மூறிக்காமல் ஊத்தையை மாத்திரம் நீக்கி க்ஷாரசூர்ணத்தைத் தேன் கலந்து தேய்க்கவும். கபாலி கைக்கு இவை எல்லாம் செய்த பிறகு தந்தஹர்ஷத்தைப்போல் சிகித்ஸை செய்யவும். கிருமி தந்தத்திற்கு சமன சிகித்ஸை செய்யவும் ஸ்ராவம் செய்வித்து வேதுபிடித்து ஸ்நேஹௌஷ தங்களைத் தேய்க்கவும். நஸ்யம், கண்டூஷம், பானம் இவை செய்யவும். ஸுஷிரத்தை ஸ்ரவிக்கச்செய்து ஒற்றடம் கொடுத்து எருக்கம்பால், ஏழிலைப்பால், இவைகளை நிரப்பவும் கிருமி சூலைக்கு இது மிக நல்லது. காயம், விடங்கம், பூஷணி வேர், ஸர்ஜிக்ஷாரம் இவை பொடி செய்து கிழிகட்டி பல்லில் ஒத்தடம் கொடுக்கவும். இவைகளால் காய்ச்சின எண்ணெய்யை வாயில் வைத்துக்கொள்ளவும். சிறுவழுதிலை, கண்டங்கத்திரி, சுண்டை, ஆமணக்கு, இவை வேரைக்கஷாயம் வைத்து இதனால் கண்டூஷம் செய்யவும். இவை செய்து குணம் ஏற்படாவிடில் பல்லை அடி யோடு பிடுங்கி பிறகு சிகித்ஸை செய்யவும். அதிமதுரப்பொடியும் எண்ணையும் சேர்த்து கண்டூஷம் செய்யவும். தேனும் அதிமதுரப் பொடியும் சேர்த்தும் செய்யவும். விதாரியஷ்டியாஹ்வாதி தைலத் தால் நஸ்யம் செய்தால் கிரமமாக கிருமிதந்தம் தீரும் விதாரீ யஷ்டியாஹ்வாதி தைலத்தாலும், விதாரி அதிமதுரம், சிருங்காடம, கசேரு, இவை கல்கம் சேர்த்து, தைலம், பால் பத்துமடங்கு இவை சேர்த்துக் காய்ச்சின தைலத்தாலும் நஸ்யம் முதலியன செய்யவும். அவசியமிருந்தாலன்றி மேல்பல்லை பிடுங்கக்கூடாது. பிடுங்கினால் பல ஸங்கடம் உண்டாகும். கிருசன், துர்பலன, விருத்தன், வாதரோகி இந்த நான்கு பேர்களுக்கும் ஒரு பல்லையும் பிடுங்கக்கூடாது.

## முகரோக சிகித்சை

எகிறு வியாதிகளில் சீதாதியில் கெட்ட ரக்தத்தைக்களைந்து, கோரைக்கிழங்கு, மருதம்பட்டை, மாக்ஷிகம், திரிபலை. ஞாழல்பூ,

சுக்கு, இவை பொடிசெய்து தேனில் குழைத்துத் தேய்த்து இதன் கஷாயத்தில் தேன் கலந்து வாயில் நிரப்பிவைத்துக்கொள்ளவும். தேன் சேர்க்காமலும் செய்யலாம். மதுரஸ்கந்த ஸித்தமான தைலத்தால் நஸ்யம் செய்யவும். பித்தோபகுசத்தை வென்னீர் ஒற்றடம் கொடுத்து வேதுபிடுத்து மண்டலாக்கிரத்தால் தேய்க்க வும். பிராய்தழையாலும் (இது உப்பு கடிதம்போல் பறபறவென இருக்கும்) தேய்க்கவும் அரக்கு, இந்துப்பு, ஞாழல்பூ, பத்தங்கம், அதிமதுரம், காவிக்கல், கோஷ்டம், மிளகு, சுக்கு, ரஸாஞ்சனம், இவை பொடி செய்து நெய் சேர்த்துத் தடவவும். பிறகு சூடான தைலத்தையாவது தேன் நெய்யையாவது வாயில் நிரப்பி வைத்துக்கொள்ளவும். மதுரமாயும் ஸ்நிக்தமாயும் உள்ள கிருதத் தால கபளம் நஸ்யம் இவை செய்யவும். தந்தபுடத்தை வேது பிடித்து சேதனமோ, பேதனமோ செய்து புண் ஏற்பட்டால் அவ் விடத்தில் அதிமதுரம், சுக்கு, இந்துப்பு, யவக்ஷாரம், இவை சம எடை எடுத்துப்பொடிந்து எகிறில் பிரட்டவும். தந்தவித்ரதி ஏற்பட்டால் காரமாயும் உஷ்ணமாயும் உள்ள மருந்துகளால் கபளம் (வாயில் நிறப்பிவைத்துக்கொள்ளுதல்) செய்யவும். இந்த மருந்துகளையே தேய்க்கவும. புழு உண்டானல் கீறி விட்டு ரக்தத்தைக்களைந்து காய்ச்சி பிறகு வைத்யம் செய்யவும். சுஷிரத்தை அறுத்துத்தேய்த்துத் தேன் பிரட்டவும். லோத்ர முஸ் தாதி தைலத்தை வாயில் நிரப்பிவைத்துக்கொள்ளவும். யஷ்டீ லோத்ராதிநஸ்யம் செய்யவும்.

---

## ஸ்ரீ தன்வந்தரி ஜயந்தி

திருச்சி ஆயுர்வேத ஸபையினர் ஸ்ரீ தந்வந்தரி ஜயந்தியை ஸ்ரீரங்கம் ஸ்ரீ ரங்கநாதர் தேவாலயத்திலுள்ள ஸ்ரீ தந்வந்தரிப் பெருமாள் ஸந்நிதியில் சென்ற 28—11—1970 புதன்கிழமையன்று கொண்டாடினர். ஸ்ரீ தந்வந்தரி பகவானுக்கு விசேஷ அபிஷேக பூஜைகள் நடந்தன.

---

## மஹாமண்டலம் மதுரை கிளை

25—11—1970 ஞாயிறன்று ஸ்ரீ S. வேலாயுதன் வைத்யரின் தலைமையில் குஷ்டநோய் பற்றிய சர்ச்சை நடந்தது. வைத்யர்கள் ஸ்ரீ G. ரவீந்திரன், ஸ்ரீ C. K ஸ்ரீதர், ஸ்ரீ P. V. ராகவவாரியர் முதலானோர் பங்கெடுத்துக்கொண்டனர்.

# PURI BROTHERS (REGD.)

**Musk, Saffron and Indian Drugs Merchants**

## JULLUNDUR-1

Tele: " VENKATESH "　　Phone: 3923

**PRICE LIST FOR 1970**

| | | Rs. P. |
|---|---|---|
| Pure Musk | per gram | 35-00 |
| Pure Saffron | ,, | 1-75 |
| Pure Gorochanam | ,, | 9-00 |
| Pu.e Pearls special | ,, | 10-00 |
| Pure Pearls No, 2. | ,, | 8-00 |
| Pure Pearls No. 3. | ,, | 6-00 |
| Pure Amber No. 1 | per gm | 4-00 |
| Pure Amber No. 2 | ,, | 3-50 |
| Pure Amber No. 3 | ,, | 3-00 |
| Pure Amber Black | ,, | 1-00 |
| **PACHAKARPURAM** | | |
| Spl Bhimseni | per gram | 0-25 |
| Singapuri (Yellow) | ,, | 0-20 |
| German or Japan | | 0-20 |
| Ashtavargam | per Kilo | 14-00 |
| Jiwak Rishwak | ,, | 2-50 |
| Meda Mahameda | ,, | 8-00 |
| Kakoli Kashir Kakoli | ,, | 14-00 |
| Ridhi Vridhi | ,, | 12-00 |
| Suryatapi Silajit | | |
| No. 1 | per Kilo | 100-00 |
| No. 2. | ,, | 85-00 |
| **BHASAMS** | | |
| Rajit Bhasam | per K. G | 1000-00 |
| Tamber Bhasam | ,, | 220-00 |
| Abhrak (100 times) | ,, | 230-00 |
| Abhrak (60 times) | ,, | 160-00 |
| Bang Bhasam | ,, | 160-00 |
| Akik Bhasam | ,, | 50-00 |
| Shilajit | ,, | 30-00 |
| Annabedi Bhasam | ,, | 30-00 |
| Swaran Makshika | ,, | 60-00 |
| Nag Bhasam | ,, | 120-00 |
| Pearl Bhasam | per ten gram | 100-00 |
| Parda Bhasam | ,, | 10-75 |

| | | Rs. P. |
|---|---|---|
| Hingul Bhasam | per ten gm | 10-75 |
| Loh Bhasam (special) | per K. G | 130-00 |
| Loh Bhasam No. 1 | ,, | 75-00 |
| Mandur Bhasam | ,, | 30-00 |
| Sankh Bhasam | ,, | 30-00 |
| Shring Bhasam | ,, | 30-00 |
| Vaikrant Bhasam | ,, | 180-00 |
| Hartal Godanti | ,, | 30-00 |
| Kant Loh Bhasam | ,, | 250-00 |
| Parwal Bhasam | ,, | 175-00 |
| **PILLS (GUTTIKA)** | | |
| Agnitundi Vati | per ten gm. | 1-00 |
| Basant Kushmakar | ,, | 50-00 |
| Chander Odya Ras | ,, | 40-00 |
| Sanjeevani Vati | ,, | 6-00 |
| Eladi Vati | per K. G. | 35-00 |
| Echha Bhedi Ras | ,, | 60-00 |
| Kaf Ketu Ras | , | 50-00 |
| Kan Kayan Vati | ,, | 45-00 |
| Khadi Radi Vati | ,, | 45-00 |
| Lavangadi Vati | ,, | 120-00 |
| Mritunjaya Ras | ,, | 125-00 |
| Mandur Vati | ,, | 40-00 |
| Sankh Vati | ,, | 50-00 |
| Shul Gaj Kesar Vati | ,, | 80-00 |
| Nityodit Ras | ,, | 125-00 |
| Chander Prabha Vati | | 60-00 |
| Maha Jograj Guggal | ,, | 110-00 |
| Jograj Guggal | ,, | 35-00 |
| Kishore Guggal | ,, | 33-00 |
| Kanchanar Guggal | ,, | 35-00 |
| Raj Parsadani Vati | 30 pills | 1-00 |
| Mridu Virechan | 1000 ,, | 16-00 |
| Leucorhin | 1000 ,, | 50-00 |
| Kasari Pills | 1000 ,, | 30-00 |

5% Commission will be allowed on all orders received direct by us

# இம்ப்காப்ஸ்

## பூரண இயந்திர சாதன வசதியோடு சுத்தமான ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்துகளை தயாரிக்கிறது

இந்திய மருத்துவ முறையின்படி வைத்தியம் செய்யும் மருத்துவர்கள் 1944-ம் ஆண்டிலேயே முதன்முதலாகக் கூட்டுறவுக் கொள்கையின் அடிப்படையில் ஒரு மருந்து சாலையை நிறுவினர். சுத்தமான மருந்துகளை தயாரித்து ஆயுர்வேத, சித்த, யுனானி மருத்துவ முறைக்குச் சேவை செய்வதுடன், நம் நாட்டு மருந்து மூலிகைகளை ஆராய்ந்து, புராதன மருத்துவ வல்லுநர்கள் பின்பற்றிய முறையை ஒரு நிலைப்படுத்துவதே இதன் நோக்கம். இதில் நாங்கள் நம்பிக்கையோடு முன்னேறினோம். இப்போது நவீன இயந்திர சாதன வசதிகளுடன் மருந்துகளை பக்குவமாகத் தயாரிப்பதில் பூரணத்துவம் பெற்று மக்களுக்குத் திறமையாக சேவை புரிகிறோம்.

இம்ப்காப்ஸ் தேசமக்களை ஆரோக்கியமாகவும் வலிவுள்ளவர்களாகவும் இருக்க துணை செய்கிறது.

IMPCOPS

தி இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாப்ரேடிவ் பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ் லிட்.
லாட்டிஸ் பிரிட்ஜ் ரோடு, அடையாறு, சென்னை-20


பிரபலமான கெமிஸ்டுகள் மற்றும் டிரக்கிஸ்டுகளிடம் கிடைக்கும்

மற்ற அலுவலகங்கள்:

4/186, மௌண்ட்ரோடு, மதராஸ்-2 போன்: 86520

48, தெற்குமாசி வீதி, மதுரை P.O.

27, காசிவிஸ்வேஸ்வரன் கோயில் தெரு, சுல்தான்பேட்டை, பெங்களூர்-2 (மைசூர் ஸ்டேட்)



maa/IMP-/747/M-TA

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவத்தினால்

கண்டுபிடிக்கப்பட்ட கை கண்ட பலனளிக்கும்

# "சக்தி சஞ்ஜீவி"

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலைக்கட்டிகளை

எளிதிலேயிலும், போக்குவதிலும்,

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்

எங்கும் கிடைக்கும்.

★

தயாரிப்பவர் :

## சக்தி விலாஸ வைத்தியசாலா

கரூர். (S. Ry.)


Edited by Vaidya Vachaspati Pandit P. S. Rama Sarma, Published by Dr. T. S Iswaran, L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam, at 27, Chinnakadai Street, Tiruchirapalli-2. Printed at Githa Press, Tiruchirapalli-2.